# VIDUTHALAI

Date : 25-Jul-08

Event : Press conference to announce the launch of Artha Money and Products offered

Location : Chennai

## இணையதளத்தின் மூலமாக பொதுக் காப்பீடு சேவைகள்

சென்னை, ஜூலை 25- இணையதளத்தின் மூலமாக நிதி தொடர்பான அனைத்துச் சேவைகளும், பொதுக் காப்பீடு, அந்நியச் செலாவணி, வரி செலுத்துதல் மற்றும் பில் கட்டணங்கள் செலுத்துதல் போன்ற சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இச்சேவைகளை இந்திய வாடிக்கையாளர்களுக்கு அளிக்க தனது செயல்பாடுகளை 'ஆர்த்தா மணி' நிதிச் சேவை மேலாண்மை நிறுவனம் தொலைபேசி மற்றும் இணையதளத்தின் மூலம் தொடங்கி உள்ளது.

ஒரு குடையின்கீழ் அனைத்து நிதி தொடர்பான சேவைகளையும் அளிப்பதன் மூலம் தனி நபர் நிதித் துறையில் சில்லறை வர்த்தகத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட ஆலோசனைகள் வழங்கப்படும்.

சென்னையில் அண்ணா சாலை, தியாகராயர் நகர், அடையாறு, ஆழ்வார்பேட்டை, குரோம்பேட்டை ஆகிய பகுதிகளில் இந்நிறுவனம் தனது கிளைகள் மூலம் இச்சேவைகளை வழங்கும் என இதன் செயல் அதிகாரி சுரேஷ் ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.